Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN

Calendar Case No.**CC.11/2019**
Miscellaneous
Preliminary Register
Deposition of PW-4 (LW-3 ) /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சங்கர்** | Father Name | : | குஞ்சு |
| Village | : | அரையூர் | Taluk | : | |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of October 2023.

2 வது எதிரி ஆஜர். 1வது எதிரி சார்பில் குவிமுச பிரிவ 317 ன்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை**

நான் தற்போது அரையூர் காலணித் தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரி சக்திவேல் மற்றும் எதிரி கோபாலை தெரியும். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 09.06.2018 ம் தேதி இரவு 9 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டிலிருக்கும் போது அவரது மகன் குருமூர்த்திக்கும் கோபாலுக்கும் குடும்ப அட்டை சம்மந்தமாக தகராறு ஏற்பட்டடு என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கோபால் ரீப்பர் கட்டையால் குருமூர்த்தியை தோள்பட்டையில் அடித்தார் என்றும் அதை தடுக்க வந்த அ.சா.1 ஐ ஆஜர் எதிரி சக்திவேல் ரீப்பர் கட்டையால் அவரது தலையில் அடித்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

காயம்பட்ட அ.சா.1 மற்றும் குருமூர்த்தியை நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -இல்லை.**